# 16 ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்



யாழ்ப்பாணம் நல்லூரில் வாழ்ந்த கந்தப்பர் சிவகாமிப்பிள்ளை தம்பதியின் ஐந்தாவது மகனாக ஆறுமுகநாவலர் 1822 ஆம் ஆண்டு அவதரித்தார். இவரது பிள்ளைத் திருநாமம் ஆறுமுகம் என்பதாகும். இவர் பிறந்த காலத்தில் இலங்கையில் நிலவிய அந்நியர் ஆட்சி காரணமாக நாட்டின் வடபகுதியில் மொழியும் சமயமும் அடக்கியொடுக்கப்பட்டிருந்தது. 1505 இல் ஏற்பட்ட போர்த்துக்கேயர் படையெடுப்பு சுதேசிகளிடம் தம் மொழியையும், பண்பாட்டினையும், சமயத்தையும் திணித்தது. அதன் பின் வந்த ஒல்லாந்தர் ஆரம்பத்தில் செய்த அடக்கு முறையைத் தொடரவில்லை எனினும் மொழியும், சமயமும் சீர்குலையக் காரணமாயினர். எனினும் இவர்களின் காலத்தில் ஆலயங்கள் புனரமைக்கப்பட்டதோடு புதிய ஆலயங்களும் எழலாயின.

ஒல்லாந்தரின் பின் வந்த ஆங்கிலேயர் மிஷனரிமார்கள் மூலம் கிறிஸ்தவத்தையும் ஆங்கில மொழியையும் சுதேசிகளிடையே பரப்பலாயினர். இந்நிலையில் தான் ஆறுமுகநாவலர் தோற்றம் பெற்றார்.

ஆறுமுகநாவலர் தமது ஆரம்பக் கல்வியை இருபாலை சேனாதிராச முதலியாரிடமும் சரவணமுத்துப் புலவரிடமும் கற்றார். இவர் தம் சிறு வயதிலேயே இலக்கண, இலக்கியங்களை முறைப்படி கற்றுப் புலமை எய்தினார். ஆறுமுகநாவலர் தமது ஆங்கிலக் கல்வியை யாழ் மத்திய கல்லூரியில் கற்றார். இவர் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் போன்ற மொழிகளில் பெற்றுக் கொண்ட புலமையினால் சைவ சமயத்தை மட்டுமின்றிப் பிற சமயங்களையும் அறிந்திருந்தார். ஆறுமுகநாவலர் பெருமான் 1841இல் யாழ். மத்திய கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்தார். பின் சைவ சமயத்தையும் அதன் வளர்ச்சிக் கருவியாகிய கல்வியையும் வளர்க்க வேண்டும் என்னும் பேராசையால், 1848இல் ஆசிரியத் தொழிலைத் துறந்து நாட்டுப் பணிகளில் இறங்கினார். இவர் ஆற்றிய பணிகளை மேல்வரும் அடிப்படைகளில் நோக்கலாம்.

1. சமயப்பணி
2. சமூகப்பணி
3. கல்விப்பணி

## 1. சமயப்பணி

இளமையிலேயே புலமை நலஞ் சிறக்கப் பெற்ற ஆறுமுகநாவலரை யாழ்ப்பாணத்து மக்களெல்லாம் தம் சமய குரவர் எனப் போற்றி வந்தனர். "தமிழ், சமயம் ஆகிய இரண்டும் என் இரு கண்கள். அவை இரண்டும் ஒளி குன்றாமல் இறுதிவரை காத்துப் பயன் கொள்வதே என் கடன். அவை வாழப் பணி புரிதலே என் வாழ்வின் குறிக்கோள்" என்று வாழ்ந்து பணி செய்தவர் ஆறுமுகநாவலர். இவர் புரிந்த சமயப் பணிகளை மேல்வருமாறு வகுத்து நோக்கலாம்.

அ . பிரசங்கம் செய்தல்
ஆ . புராண படனஞ் செய்தல்
இ . கண்டனங்கள் செய்தல்
ஈ . பிரபந்தங்கள் இயற்றுதல்

### அ. பிரசங்கம் செய்தல்

அழிந்து கொண்டு குற்றுயிராய் இருந்த சைவத்தை வளர்க்க நாவலர் தம் சொல்லாற்றலைக் கையாண்டார். பிரசங்கம் மூலம் சைவத்தை இவ்வுலகில் நிலைநிறுத்த முயன்றார். 1847இல் வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலில் நாவலர் தம் முதற் பிரசங்கத்தை நிகழ்த்தினார். நாவலர் அவர்களின் பிரசங்கங்கள் பொதுவாக கடவுள் வாழ்த்து, சிவபக்தி, வேதாகமங்கள், திருவிழா, யாக்கை நிலையாமை, சிவதீட்சை, மகளிர் ஒழுக்கம், தருமம், செய்ந்நன்றியறிதல், கல்வி கற்பித்தல், பிரபஞ்சம், மாயை, பேதமை, கொல்லாமை போன்ற பொருள்களில் அமைந்திருந்தன. பிரசங்கத்தின் சிறப்புக் கருதி திருவாவடுதுறை ஆதீனம் இவருக்கு "நாவலர்" என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.

### ஆ. புராண படனஞ் செய்தல்

கோயில்களில் புராண படனஞ் செய்யும் முறை ஈழத்தவர்க்கே உரிய தனிச் சிறப்புக்குரியதாகும். இந்த முறை ஆறுமுகநாவலரால் சமயப் பிரசார ஊடகமாகப் பயன்படுத்தப்பட்டது. புராண படனமுறை என்பது ஒருவர் புராணப் பாடல்களைப் பாட, இன்னொருவர் அதன் பொருளைக் கூறும் முறையாகும். இதில் பாடுபவரும் சரி, பொருள் சொல்பவரும் சரி பாடல் போல இசைத்துத் தான் பாடுவர். இப்புராண படனம் மூலம் கல்வியையும் சமய பக்தியையும் வித்துவத்தையும் ஆறுமுகநாவலர் மக்ளிடத்து ஏற்படுத்தினார்.

### இ. கண்டனம் செய்தல்.

ஆறுமுகநாவலர் தம் சமயத்துக்கு எதிராகச் செயற்பட்டவர்கள் மீது கண்டனங்களை மேற்கொண்டார். இக் கண்டனங்களை இரு நிலைகளில் மேற்கொண்டார். ஒன்று, கிறிஸ்தவ சமயத்தின் மேல் தொடுத்த கண்டனங்கள். மற்றையது, சுதேசிய சமய வாதிகள் மேல் தொடுத்த கண்டனங்கள்.

### ஈ. பிரபந்தங்கள் இயற்றுதல்.

சைவத்தை வளர்க்கும் நோக்கில் நாவலர் சில பிரபந்தங்களை இயற்றியுள்ளார். அதாவது,

- புலோலி ஸ்ரீ பசுபதீஸ்வரப் பெருமான் திருவூஞ்சல்.
- கதிர்காமக் கந்தன் மீது பாடிய கீர்த்தனைகளும் சில தனிப்பாடல்களும்

## 2. சமூகப்பணி

ஆறுமுகநாவலர் சமயப் பணிகள் மட்டுமன்றிச் சமூகப் பணிகளிலும் ஈடுபட்டுள்ளார். அத்துடன் அரசியலிலும் ஈடுபட்டிருக்கிறார். இவரின் சமூகப் பணிகளுக்கு எடுத்துக் காட்டாகக் கஞ்சித்தொட்டித் தருமம், மட்டக்களப்பு யாழ்ப்பாண வேளாண்மைச் சங்கம் என்பன குறிப்பிடத்தக்கவை. கஞ்சித்தொட்டித் தருமமானது 1876, 1877இல் இலங்கையின் வடபகுதி உட்பட பல இடங்களிலும் ஏற்பட்ட கொடிய பஞ்சத்தினால் மக்களுக்கு உண்டான பசி, பட்டினியைப் போக்குவதற்காக ஆறுமுகநாவலரால் மேற்கொள்ளப்பட்ட ஒரு பணியாகும்.

## 3. கல்விப் பணி

சைவ சமயக் கல்வியை வளர்ப்பதற்கு ஆறுமுகநாவலர் ஆற்றிய பணிகளை மேல்வருமாறு கூறலாம்.

- 1848இல் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவியமை.
- 1864இல் தமிழகம் சிதம்பரத்தில் சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவியமை.
- 1872இல் கோப்பாய் மற்றும் புலோலி ஆகிய இடங்களில் சைவப் பிரகாச வித்தியாசாலைகளை நிறுவியமை.
- 1849இல் நல்லூரில் வித்தியாநுபாலன இயந்திரசாலை என்னும் அச்சியந்திரசாலை நிறுவியமை.
- மாணவர்களுக்கு ஏற்ற வகையில் பாலர் பாடம் 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் புத்தகங்களை எழுதி வெளியிட்டமை.

- சைவ வினாவிடை 1ஆம், 2ஆம் புத்தகங்களை வெளியிட்டமை.
- இலக்கணச் சுருக்கம், இலங்கைப் பூமி சாஸ்திரம், சிவாலய தரிசன விதி, சிதம்பர மான்மியம் முதலான நூல்களை எழுதி வெளியிட்டமை.
- பெரியபுராண வசனம் எழுதி வெளியிட்டமை.
- ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நன்நெறி, நல்வழி போன்ற நூல்களுக்கு உரையும் இன்னும் பல நூல்களுக்கு புத்துரையும் எழுதி வெளியிட்டமை.

ஆறுமுகநாவலர் இத்தகைய சைவப்பணிகளை ஆற்றியதோடு மாத்திரமன்றித் தனக்குப் பின்னர் தனது பணிகளைத் தொடர்ந்து ஆற்றச் சிவசங்கர பண்டிதர், சி.வை. தாமோதரம்பிள்ளை, பொன்னம்பலபிள்ளை, காசி வாசி செந்திநாத ஐயர், சபாபதி நாவலர், சதாவதானி கதிரவேற்பிள்ளை முதலான சைவப்பெரியார்களை நெறிப்படுத்தி நாவலர் வளர்த்த நன்நெறி ஈழத்திலும், இந்தியாவிலும் தொடர வழிவகுத்தார்.

இத்தகைய பணிகளால் நாவலர் ஈழத்து சைவ சமயத்தின் **மறுமலர்ச்சித் தந்தை**யாகவும், **விடிவெள்ளி**யாகவும் கருதப்பட்டார். 1879ஆம் ஆண்டு மார்கழி மாதம் 21ஆந் திகதி இறையடி சேர்ந்தார். அவரது பூதவுடல் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைக் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. அவரது குருபூசைத் தினம் கார்த்திகை மாத மக நட்சத்திரத்தில் அனுட்டிக்கப்படுகிறது.

நாவலர் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்ந்து ஆற்றவும் அவரது உடைமைகளைப் பாதுகாக்கவும் நாவலர் சபை உருவாக்கப்பட்டது. இதன் தலைமைத்துவத்தின் கீழ் 1979ஆம் ஆண்டு நாவலர் நூற்றாண்டு விழா நாடளாவிய ரீதியில் கொண்டாடப்பட்டது. நாவலரைச் சுதேசியப் பெரியார்களில் ஒருவராக நமது இலங்கை அரசாங்கம் அங்கீகரித்ததோடு அவரது பணிகளைக் கௌரவித்து முத்திரை ஒன்றையும் வெளியிட்டது.

நாவலரது சைவசமயப் பணிகளை நினைவு கூருமுகமாக நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கருகில் நாவலர் மணிமண்டபமும் நாவலர் வீதியிலுள்ள அவரது இல்ல வளாகத்தில் இந்து கலாசார திணைக்களத்தினால் நாவலர் கலாசார மண்டபமும், தொல்பொருளியல் திணைக்களத்தினால் யாழ்ப்பாணத் தொல்பொருட்காட்சிச்சாலையும் நிறுவப்பட்டன.

**நல்லை நகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல்**
**சொல்லு தமிழெங்கே சுருதி எங்கே - எல்லவரும்**
**ஏத்து புராணாகமங்கள் எங்கே பிரசங்கமெங்கே**
**ஆத்தனறி வெங்கே அறை.**

என்று ஆறுமுகநாவலரின் பிறப்பின் முக்கியத்துவத்தினை வியந்து பாடியுள்ளார் சி.வை. தாமோதரம்பிள்ளை.



நாவலரது திருவுருவப் படம்



சிதம்பரத்தில் அமைந்த
சைவப்பிரகாச வித்தியாசாலை




யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணையில்
அமைந்த சைவப்பிரகாச வித்தியாசாலை



சென்னையில் அமைந்த
வித்தியாநுபாலன அச்சகம்



யாழ்ப்பாணம் வண்ணார்
பண்ணையில் அமைந்த
வித்தியாநுபாலன அச்சகம்



நாவலர் அணிந்திருந்த பட்டு வேட்டி
சால்வை, உருத்திராக்கம்
மற்றும் பூக்கூடை



நல்லூர் நாவலர் மணிமண்டபம்



நாவலர் நூற்றாண்டு விழாவின் போது
உருவாக்கப்பட்ட நாவலர் சிலை



நாவலரைக் கௌரவித்து 1971 ஆம்
ஆண்டு வெளியிடப்பட்ட முத்திரை



நாவலர் கலாசார மண்டபம்

## மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. ஆறுமுகநாவலர் ஆற்றிய சமயப்பணிகளை வகைப்படுத்துக?
2. ஆறுமுகநாவலரின் சமூகப் பணிகள் யாவை?
3. ஆறுமுகநாவலர் இயற்றிய பிரபந்தங்கள் யாவை?
4. ஆறுமுகநாவலர் வெளியிட்ட நூல்கள் எவை?
5. ஆறுமுகநாவலர் வழியில் நின்று சைவசமயப்பணிகள் ஆற்றிய பெரியார்கள் மூவரின் பெயரைத் தருக.

## செயற்பாடு

01 **ஆறுமுகநாவலரின் சமயப்பணிகளும் சமூகப் பணிகளும்** என்ற தலைப்பில் ஐந்து நிமிடத்திற்கு ஆற்றக் கூடிய பேச் சொன்றை வகுப்பறையில் நிகழ்த்துக.

## பாடச்சுருக்கம்

- 19ஆம் நூற்றாண்டில் சைவமும் தமிழும் தாழ்ந்து கொண்டிருக்கையில் ஆறுமுகநாவலர் நல்லூரில் தோன்றினார்.
- இவர் சமயப் பணி, சமூகப் பணி, கல்விப் பணிகளினூடாகச் சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டாற்றினார்.
- புராணபடனம் செய்யும் முறையை அறிமுகஞ் செய்தவரும் நாவலர் பெருமானே.